## காட்பாடி சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் சந்திப்பு:

# பாசிஸ்ட்டுகளின் சதிகளை முறியடிப்போம் - புதிய சரித்திரம் படைப்போம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை!

**இராணிப்பேட்டை, நவ. 5 -**

**இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற் கொண்டார். அங்கு அவருக்கு சிறப்பான எழுச்சி மிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது அவர் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகளைச் சந்தித்து கலந்துரையாடினார் .**

**அப்போது அவர் பாசிசத்தின் சூழ்ச்சிவலைகளை அறுத்தெறிந்து. 2026 தேர்தலில் கழக அணி வெற்றி வாகை சூடுவதே மாநில உரிமைகளைக் காப்பாற்ற நமக்கு முன் உள்ள வழி என்று எழுச்சி மிக்க உரையாற்றினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இராணிப்பேட்டை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச் சிகளில் கலந்து கொண்டு, மாலை முதல் வேலூர் மாவட்டம் அதுவும் குறிப்பாக, இந்த காட்பாடி தொகு திக்கு வருகை தந்து கழகத்தின் நிர்வாகிகள். பி.எல்.ஏ 2, பி.எல்.சி நிர்வாகிகள் உங்களை எல்லாம் ஒரே அரங்கத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த வேலூர் மாவட்டத்துக்கும் எனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. 2019 நாடாளுமன்ற தேர்தலின்போது நான் முதன்முறையாக பிரச்சாரம் செய்ய என்னுடைய அரசியல் பயணத்தைத் துவங்கியது, அதற்கு வித்திட்டது இந்த வேலூர் மாவட்டம் தான். நான் வாக்கு கேட்டது இங்கே அமர்ந்திருக்கக் கூடிய என் அருமை சகோதரர் கதிர் ஆனந்த் அவர்களுக்காகத்தான்.

வேலூருக்கு பெருமை, இங்கு இருக்கக்கூடிய கோட்டைதான். ஆனால் இன்றைக்கு கழகத்தின் கோட்டையாக திகழ்ந்து கொண்டிருப்பது இந்த வேலூர் மாவட்டம் என்று சொன்னால், அது மிகை யாகாது. இந்த வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய இந்த காட்பாடி தொகுதியை இன்னும் பெருமையோடு சொல்ல வேண்டும் என்றால். நம் இயக்கத்திற்கு பொதுச் செயலாளரை கொடுத்திருக்கக்கூடியது இந்த காட்பாடி தொகுதிதான்.

கடந்த பத்து நாட்களுக்கு முன்பே தேதி கொடுத்து, அதன் பிறகு சென்னையில் தொடர்ந்து கனமழையி னால் இந்த தேதிகள் எல்லாம் ஒரு ஐந்து நாட்கள் தள்ளி வைக்கப்பட்டு, இந்த காட்பாடி தொகுதிக்கு நான் வரப்போகிறேன் என்று தெரிந்தவுடன், நம் கழகத் தின் பொதுச்செயலாளரே நேரில் வந்து, ஒரு நாள் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, நான் எந்த நிகழ்ச் சிக்கெல்லாம் செல்லப்போகிறேன் என்பதை அறிந்து, ஆய்வுகளை நடத்தினார்.

**வெற்றி உறுதி!**

என்னுடன் அவரும் வருவதாக இருந்தது. உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நேற்று அவரை சந் தித்துவிட்டு, அவரின் அனுமதியைப் பெற்றுவிட்டு இன்று அவரின் மண்ணுக்கு நான் வந்துள்ளேன். அவர் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வில்லை என்றாலும் அவரின் நினைவு முழுவதும், `உதயா இன்றைக்கு என் தொகுதிக்கு சென்றுள் ளான். அங்கு நிகழ்ச்சிகள் எல்லாம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? சரியான வரவேற்பு கொடுத்தார் களா?' என்று அவரின் எண்ணம் முழுவதும் இன்று இந்த மாவட்டத்தில்தான் இருக்கும். அவரின் வாழ்த் துகளுடன் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி சிறப்பாக ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்டக் கழ கச் செயலாளர் அண்ணன் நந்தகுமார் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது பாராட்டுகளையும், வாழ்த்துக ளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் நந்தகுமார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுப் பேசினார். இளைஞர் அணிச் செயலா ளர், துணை முதலமைச்சர் அவர்கள் கைராசிக்காரர் என்றுச் சொன்னார். அதில் ஒரு சின்ன திருத்தம். எனக்கு இராசி மேல் எல்லாம் நம்பிக்கை கிடையாது. அதிலும் கைராசியில் சுத்தமாக நம்பிக்கை கிடை யாது. கை மீது நம்பிக்கை இருக்கிறது. அது உங்கள் உழைப்பின் மீது இருக்கின்ற நம்பிக்கைதான். அடுத்த ஐந்து மாதங்கள் நாம் அனைவரும் ஒன்றி ணைந்து ஒரே நோக்கத்துடன் மக்களைச் சந்தித்து பிரச்சாரத்தை மேற்கொண்டோம் என்றால் நிச்சயம் வெற்றி உறுதி.

இன்றைக்கு நம் திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை நிறைவு செய்து, 76வது ஆண்டில் வெற்றி நடைபோட்டுக்கொண்டு இருக்கிறது. இந்த 75 வருடத்தில், எத்தனையோ சவால்கள், துரோகங் களை நம் திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்திருக் கிறது.

**வென்ற ஒரே தலைவர்!**

இத்தனை நெருக்கடிகளையும் மீறி இன்றைக்கும் நம் கழகத்தின் கருப்பு - சிவப்புக் கொடி உயரப் பறக்கி றது என்றால், அதற்கு காரணம் இங்கு வந்துள்ள கழக உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான். கலைஞ ரைப் பற்றி நாம் அனைவரும் பெருமையாக பேசு வோம். நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற ஒரே தலைவர் என்றால், டாக்டர் கலைஞர் அவர்கள் மட் டும்தான். திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற் றாலும் சரி, வெற்றி வாய்ப்பை இழந்தாலும் சரி, கலைஞர் என்றைக்கும் அவர் நின்ற தேர்தலில் தோற்றதே கிடையாது. அதுதான் கலைஞரின் பெருமை. 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந் தெடுக்கப்பட்ட ஒரே தலைவர் கலைஞர் மட்டும்தான்.

கலைஞரைப்போல் நம் தலைவருக்கும் ஒரு பெருமை இருக்கிறது. நம் தலைவர் இயக்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றபிறகு அவர் சந்தித்த அத் தனை தேர்தல்களிலும் வெற்றிப்பெற்ற ஒரே தலை வர் நம் தலைவர் அவர்கள்தான். இந்த பெருமைக் கெல்லாம் காரணம், நீங்கள் மட்டும்தான். உங்கள் உழைப்பு இல்லாமல் இவை எல்லாம் சாத்தியமே இல்லை. நீங்கள் இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது, கலைஞர் கிடையாது, நம் தலை வர் கிடையாது.

உங்களின் உழைப்பால்தான் 2021ல் நம் தலை வர் அவர்கள் முதலமைச்சராக தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த பொறுப்பில் அமர்ந்தார்.

ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர் கள், மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்துக்கு தான் முதல் கையெழுத்திட்டார்கள். இன் றைக்கு அந்த திட்டத்தின் மூலம், இந்த நான்கரை வருடத்தில் 820 கோடி பயணங்களை மகளிர் மேற் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, இந்த வேலூர் மாவட்டத்தில் மட்டும் 15 கோடி பயணங்களை வேலூர் மாவட்ட மகளிர் மேற்கொண்டு இருக்கிறார் கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபா யிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

**22 லட்சம் குழந்தைகள்**

முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம். ஒவ் வொரு நாளும் சுமார் 22 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இந்தத் திட்டத்தை சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்கள் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரி வுப்படுத்தினார். அந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தின ராக பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் சிங் அவர் கள் தமிழ்நாட்டுக்கு வந்து, இந்த திட்டத்தைப் பார்த்து பாராட்டிப் பேசினார். முதலமைச்சர் அவர்களே இது மிக, மிக சிறப்பான திட்டம். அடுத்த ஆண்டிலிருந்து எனது மாநிலத்திலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறேன் என்று சொல்லி வாழ்த்திவிட்டு சென்றார்.




அரசுப் பள்ளியில் படித்த மாணவ மாணவிகள் உயர்கல்வி சேரும் போது, தமிழ்ப்புதல்வன் - புது மைப்பெண் திட்டங்களை நம் முதலமைச்சர் அவர் கள் செயல்படுத்தினார். இன்றைக்கு தமிழ்நாடு இந்தி யாவிலேயே முதலிடத்தில் உள்ளது. 50 சதவிகித மாணவர்கள் உயர்கல்வி சென்று சேர்கிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். நாம் ஆட்சிக்கு வரும்போது கடும் நிதி நெருக்கடி இருந்தது. எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தைச் செயல்ப டுத்த முடியாது என்று நம்மை விமர்சித்தார்கள். ஆனால், நம் தலைவர் அவர்கள் இரண்டு வருடங்க ளுக்கு முன்பு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் தேதி இந்தத் திட்டத்தை அமல்படுத்தினார். இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகி றார்கள். 26 மாதங்களாக ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு 26 ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர் கள் உரிமைத்தொகையாக கொடுத்திருக்கிறார்.

**மகளிர் உரிமைத்தொகை!**

சில இடங்களில் இந்தத் திட்டம் கிடைக்கவில்லை என்ற குறைகள் இருந்தது. மக்களின் குறைகளை தலைவரிடம் சொன்னவுடன், அதில் இருந்த விதிமு றைகள் சிலவற்றை தளர்த்தி உங்களுடன் ஸ்டாலின் என்ற முகாம்களை முதலமைச்சர் நடத்த சொன் னார். அந்த முகாம்களில் இந்த திட்டத்திற்காக அதிக மான மனுக்கள் வந்துள்ளது. அதையெல்லாம் சரி பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். வருகின்ற டிசம்பர் 15ஆம் தேதி முதல் விடுபட்டுபோன மகளிரில், தகுதி யான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை நிச்சயம் வழங்கப்படும் என்று சட்டசபையில் அறிவித்துள்ளேன். இந்த வேலூர் மாவட்டத்தில் மட் டும் ஒரு லட்சத்து 95 ஆயிரம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

இப்படி தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்த காட்பாடி தொகுதிக்கும் நம் முதலமைச்சர் அவர்கள், உங்களு டைய சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு நலத்திட்டங்க ளைப் பெற்று தந்திருக்கிறார். இந்தத் தொகுதி மக்க ளுக்குப் பயன்படுகின்ற வகையில், சுமார் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 65 படுக்கைகள் வசதி கொண்ட அரசு மருத்துவமனை கட்டி கொடுத்தது நம்முடைய அரசு. அரசு சட்டக் கல்லூரிக்கு ரூபாய் 6 கோடியே 50 லட்சம் ரூபாயில் புதிய நூலகம் அமைத்து கொடுத் தது நம்முடைய அரசு. சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட் டில் பல்வேறு கிராமங்களில் பள்ளிகளுக்கான ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்திருக் கக்கூடியது நம்முடைய அரசு.

பெண்ணை ஆற்றின் குறுக்கே 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை, இப்படிப் பல்வேறு பணி களை இந்த காட்பாடி தொகுதிக்கு நம்முடைய முதல மைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். இந்த மாதிரி பல்வேறு திட்டங்கள். ஒவ்வொரு தொகுதியாகப் பார்த் துப் பார்த்து செய்ததால் இன்றைக்கு தமிழ்நாடு இந்தி யாவிலேயே 11.19 சதவிகித பொருளாதார வளர்ச்சியு டன் இன்றைக்கு இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு சிறப்பு வாய்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாம் எவ்வளவுதான் நெருக்கடி கொடுத்தாலும் தமிழ்நாடு மட்டும் இவ்வளவு சிறப்பாக செயல்படுகி றதே என்றுதான் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கும், அவர்க ளுடைய அடிமைக் கூட்டத்துக்கும் நம்முடைய தமிழ் நாட்டைப் பார்த்து, தமிழ்நாட்டு மக்களைப் பார்த்து வயிற்றெரிச்சல். அதனால்தான் தொடர்ந்து நெருக்கடி கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். நிதி உரிமை மொழி உரிமை - கல்வி உரிமை என மொத்தமாக மாநில உரிமைகளை பறிக்கிறார்கள்.

புதியக் கல்விக் கொள்கையை கொண்டு வருகி றார்கள். இந்த புதிய கல்வி கொள்கையை மற்ற மாநி லங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டார்கள். அதில் இருக்கக்கூடிய சரத்துக்கள் எல்லாம் பார்த்தீர்கள் என் றால், தமிழ்நாட்டு மாணவர்கள் மீண்டும் குறுக்கு வழியில் இந்தியை திணிக்கிற வழியை ஒன்றிய பா.ஜ.க அரசு செயல்படுத்துகிறது. மீண்டும் சமஸ்கிரு தத்தை எப்படியாவது தமிழ்நாட்டுக்குள் திணிக்கி றதுக்கான முயற்சியில் ஈடுபடுகிறது. நாம் ஒழித்துக் கட்டிய குலக்கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தப் பார்க் கிறார்கள். அப்பாவும் தாத்தாவும் என்ன தொழில் செய்தார்களோ, அதே தொழிலைதான் பேரனும் பேத்தியும் செய்ய வேண்டும் என்று சொல்வதுதான் குலக்கல்வித் திட்டம். அதை ஒழித்து கட்டியது திரா விட இயக்கம். அதை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் நுழைக்க ஒன்றிய பா.ஜ.க அரசு முயற்சி செய்கிறது.

**புதிய கல்விக் கொள்கை**

ஒன்றிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் வெளிப் படையாகவே சொன்னார். எல்லா மாநிலங்களும் புதிய கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டன. தமிழ்நாடு மட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கி றது. ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய 2,500 கோடி ரூபாய் நிதியைக் கொடுக்க மாட்டோம் என்று ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் சொன்னார். ஆனால் நம் தலைவர் சொன்னார். நீ புதிய கல்விக் கொள்கையின் மூலமாக மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இந்தியைத் திணிக்க முயற்சிக்கிறாய். சமஸ்கி ருதத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கிறாய். குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் கொண்டு வர முயற்சிக்கிறாய். 2,500 கோடி இல்லை நீ 10,000 கோடி கொடுத்தாலும், உன் புதிய கல் விக் கொள்கையை தமிழ்நாட்டுக்குள் அனும திக்க மாட்டேன் என்று சொன்ன ஒரே தலை வர் தமிழ்நாடு முதலமைச்சர் நம் தலைவர்தான். இன்றைக்கு மற்ற மாநில முத லமைச்சர்கள் எல்லாம் அதை பின்பற்று கிறார் கள். தமிழ்நாடு முதலமைச்சர் என்ன முடிவெ டுக்கிறார், அந்த முடிவை நாமும் எடுப்போம் என்று மற்ற மாநில முதலமைச்சர்களுக் கெல்லாம் எடுத்துக்காட்டாக, நம் முதலமைச்சர் அவர்கள் விளங்கிக்கொண்டு இருக்கிறார்.

தொகுதி மறுவரையறையைக் கொண்டுவ ரப் பார்க்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கின் றன. 39 தொகுதிகளை, 32 தொகுதிகளாக குறைப்பதற்கான வேலைகளில் ஒன்றிய பா.ஜ.க அரசு ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது. நம்முடைய மாநில உரிமைகளைக் குறைப்பதற்கான செயல்கள்.

பிரதமர் மோடி அவர்கள் பீகாரில் பிரச்சாரம் செய் தார். தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான அவதூறு களை அங்கு பரப்புகிறார். தமிழ்நாட்டில் பீகார் தொழி லாளர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று பிரதமர் மோடி அவர்கள் பீகாரில் சொல்கிறார். ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்துக்கும் அவர்தான் பிரதமர் என் பதை மறந்துவிட்டு, மாநிலங்களுக்குள் சண்டையை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் நினைக்கிறார். இதற்கு முன் ஒடிசாவில் தேர்தல் வந்தபோது, தமிழ் நாட்டு மக்கள் கோயில் சாவியைத் திருடி வந்துவிட் டார்கள் என்று பிரச்சாரம் செய்தார்.

எனக்கு தெரிந்து பீகாரில் இருந்து இங்கு வந்து, தன் நிம்மதியை எல்லாம் தொலைத்துக்கொண்டு இருக்கிறார் என்றால் அது ஒரேயொருவர்தான். அது நம் ஆளுநர் மட்டும்தான். ஆனால், அந்த ஆளுந ரைக்கூட நம் முதலமைச்சர் அவர்கள், பீகாரில் உள்ள அவரின் வீட்டுக்கு அனுப்ப விரும்பவில்லை. தலைவர் கோரிக்கை வைத்துள்ளார். தயவுசெய்து எங்கள் தமிழ்நாட்டின் ஆளுநராக ரவி அவர்களே தொடர வேண்டும். எங்களின் பாதி பிரச்சாரத்தை அவரே செய்துகொண்டு இருக்கிறார் என்று தலைவர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

**வாக்காளர் பட்டியல் திருத்தம்**

இன்னொரு சதி. அதுதான் எஸ்.ஐ.ஆர், ஸ்பெஷல் இன்டென்சிவ் ரிவிஷன் அதாவது சிறப்பு தீவிர வாக் காளர் பட்டியல் திருத்தம். இரண்டே மாதங்களில் எப் படி ஆறரை கோடி மக்களுடைய வாக்காளர் பட்டி யலை எப்படி திருத்தம் செய்வார்கள். நமக்கு சாதகமா இருக்கக்கூடிய சிறுபான்மையினர் வாக்குகளை எல் லாம் நீக்கிவிட்டு, தமிழ்நாட்டு அரசியலில் எப்படியா வது நாம் வெற்றிப்பெற்றுவிட முடியுமா என்று நினைக்கிறார்கள்.

சாதாரணமாக தேர்தல் நடந்தால், முறையாக, நேர்மையாக தேர்தல் நடந்தால் நிச்சயம் தமிழ்நாட்டு மக்கள் நம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று குறுக்கு வழியில் எப்படியாவது வெற்றிப்பெற வேண் டும் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு இதற்கு முயற்சிக் கிறது. இதை நாம் ஆரம்பத்தில் இருந்து எதிர்த்துக் கொண்டு இருக்கிறோம். நிச்சயம் நீதிமன்றத்திற்கும் செல்வோம் என்று தலைவர் சொல்லி இருக்கிறார். நேற்று கூட அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இருக்கிறார்.

அனைத்துக் கட்சிகளும் இந்த எஸ்.ஐ.ஆர் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. ஆனால், இன்றைக்கு அ.தி.மு.க.வினர் என்ன தெரியுமா சொல்லி இருக்கிறார்கள்? தி.மு.க எதிர்க்குதா? பா.ஜ.க கொண்டு வந்திருக்கிறதா? அப்போது நாங்கள் பா.ஜ.கவை ஆதரிப்போம். எஸ்.ஐ.ஆர் தமிழ்நாட் டுக்கு வேண்டும் என்று தமிழ்நாட்டில் சொல்லியிருக் கக்கூடிய ஒரே இயக்கம் அ.தி.மு. க. இது தமிழ்நாட்டு மக்களுக்கு செய்திருக்கக்கூடிய மிகப்பெரிய ஒரு துரோகம். இதையெல்லாம் மக்களிடம் கொண்டு போய் நாம் சேர்க்க வேண்டும்.

எஸ்.ஐ.ஆருக்கு எதிரான சட்டப் போராட்டம் தொட ரும் என்று நம்முடைய தலைவர் நேற்று சொல்லி இருக்கிறார். நிச்சயம் அதிலும் வெற்றி பெறுவோம். எஸ்.ஐ.ஆர் திட்டத்தை எதிர்த்தால், இரட்டை இலையை முடக்கிடுவார்கள் என்று எடப்பாடி பழனி சாமி அவர்களுக்கு பயம். ஆகவே சங்கிகள் அடி மைக் கூட்டத்தின் சூழ்ச்சித் திட்டமான எஸ்.ஐ.ஆரை நாம் விழிப்போடு இருந்து நாம் அனைவரும் சேர்ந்து வீழ்த்த வேண்டும்.

எடப்பாடி பழனிசாமியின் நிலைமையை நினைத் தால் பாவமாக இருக்கிறது. முதலில் ஜெயலலிதா அம்மையார் காலில் விழுந்தார், அந்த அம்மா இறந்த பிறகு, அவரின் தோழி சசிகலா காலில் விழுந்தார், அதற்பிறகு சசிகலா சிறைக்கு சென்றவுடன் டி.டி.வி காலில் விழுந்தார். அதற்குபிறகு டெல்லிக்கு சென்று மோடி, அமித்ஷா காலில் விழுந்தார். மறுபடியும் தமிழ்நாட்டிலேயே விழுறதுக்கு புது கால்கள் கிடைக் குமா என்று வலைவீசி தேடிக்கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

எடப்பாடி பழனிசாமிக்கு தெரிந்தது இரண்டே விஷயம்தான். ஒன்று காலில் விழுவது, இன் னொன்று காலை வாருவது. எடப்பாடி பழனிசாமி அவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்பினார். அப்போது தமிழ் நாட்டை மீட்பது இருக்கட்டும், முதலில் உங்களின் கட் சியை மீட்டெடுங்கள் என்று சொன்னேன்.

நான்கூட அப்போது சொன்னேன். நீங்கள் எந்த நேரத்தில் பேருந்தை எடுத்துக்கொண்டு கிளம்புனீர் களோ தெரியவில்லை. ஒவ்வொரு கூட்டம் செல்லும் போது அந்தப் பேருந்திலிருந்து கூட்டம் குறைந்து கொண்டே இருக்கிறது. கூட்டத்தை முடித்துவிட்டு வரும்போது நீங்களும் அந்த டிரைவரும் மட்டும்தான் வருவீர்கள் என்று சொன்னேன். கட்சியில் உள்ள ஒவ்வொருவரையும் நீக்கிக்கொண்டு இருக்கிறார்.

எடப்பாடி பழனிசாமி முதலில் சசிகலாவை நீக்கி னார், அதன்பிறகு தினகரனை நீக்கினார், பிறகு ஓ.பி. எஸ்ஸை நீக்கினார், நேற்று செங்கோட்டையனை நீக்கி இருக்கிறார். இப்படி தொடர்ந்து நீக்கி, நீக்கி ஒரு நாள் அவர் தன்னையே மறந்து, `எடப்பாடி பழனி சாமி கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்' என்று அவரே தன்னை நீக்கினாலும் நீக்கிக் கொள்வார்.

எடப்பாடி பழனிசாமி அவர்கள் அவரின் கட்சியை `கரகாட்டகாரன்' படத்தில் வரும் அந்த கார் மாறி மாற் றிவிட்டார். இந்த காரை நான் வைத்திருக்கிறேன், இந்த கட்சி யாரிடம் இருக்கிறது என்று தெரிய வில்லை' என்று சொல்லப் போகிறார். ஒரு ஆக்சி டென்ட் ஆன காரின் நிலைமைதான் அண்ணா திரா விட முன்னேற்றக் கழகத்துக்கு.

**கழகத்தின் வரலாறு!**

சசிகலா, ஓ.பி.எஸ், டி.டி.வி.தினகரன் இவர்கள் எல்லாம் தி.மு.க.வின் பிடீம் என்று சொல்லிவிட்டார். நான் சொல்கிறேன். கலைஞரின் உடன்பிறப்புகள் நீங் கள் இருக்கிற வரைக்கும் தி.மு.கவுக்கு பி டீமும் தேவை யில்லை, சி டீமும் தேவையில்லை. எப்போதும் எதிரி களை களத்தில் நேருக்கு நேராக சந்திக்கிற வரலாறு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு.

இதில் மிகப்பெரிய காமெடியன் இருக்கிறார். அவர் தான் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள். நேற்று முன் தினம் பேட்டி கொடுத்திருக்கிறார். எடப்பாடி பழனிசா மிக்கு அ.தி.மு.கவின் தலைமை, அவர் முதலமைச்சர் ஆனது எல்லாம் பிக்பாக்கெட் அடித்ததுமாதிரி என்று சொல்லிவிட்டார். இப்படிப்பட்ட அடிமைகளையும், பாசிஸ்ட்டுகளையும் நாம் மறுபடியும் விரட்டி அடிக்க வேண்டிய நேரம்தான் 2026 சட்டமன்றத் தேர்தல்.

இங்கு பூத் கமிட்டி உறுப்பினர்கள் வந்து இருக்கி றீர்கள். நீங்கள்தான் கழகத்தின் இரத்த நாளங்கள். நம்மிடம் ஆழமான கொள்கை இருக்கிறது. திராவிட மாடல் அரசின் சாதனைகள், வரலாறு இருக்கிறது.

நம் தலைவர் அடிக்கடி சொல்வார். நிச்சயமாக இந்த நான்கரை வருடத்தில் தமிழ்நாட்டில் உள்ள குடும்பத்தில் ஒருவராவது நம் அரசின் திட்டங்களால் நிச்சயம் பயன்பெற்று இருப்பார்கள் என்று. அவர்களி டம் நம் திட்டங்களைப் பற்றி பேசுங்கள்.

நான் இன்றைக்கு இங்கு பேசிட்டு அடுத்த தொகு திக்கு போய்விடுவேன். நீங்கள்தான் இங்கு இருந்து அடுத்த 5 மாதம் பிரச்சாரம் செய்ய வேண்டும். சிறு சிறு கூட்டங்கள், துண்டறிக்கைகள், சமூக வலை தளங்கள் மூலமாக மக்களிடம் தொடர்ந்து பேசிக்கொண்டே இருங்கள். திண்ணை பிரச்சாரங்களை மேற்கொள் ளுங்கள். உங்களுக்குள் பொறுப்புகளைப் பிரித்துக் கொள்ளுங்கள். இந்த தெருவுக்கு நான் பொறுப்பு, இந்த 10 வீடுகளுக்கு நான் பொறுப்பு என்று நீங்கள் தேர்தல் பணிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். நிச்சயமாக இதையெல்லாம் அடுத்த 5 மாதம் சரியாக செய்தோம் என்றால், அடுத்த 2026லும் ஆட்சி அமைக் கப் போவது, நம் திராவிட முன்னேற்றக் கழகம் தலை மையிலான நம் அணிதான்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகே யன், அமுலு விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், மேயர் சுஜாதா ஆனந்த குமார், மாவட்ட கழகத் தின் அவைத் தலைவர் முகமது சகி, மாவட்ட கழகத்தின் துணைச் செயலாளர்கள் அரசு, பிரதாப்குமார், மலர்வழி லோகநாதன், மாவட்டப் பொரு ளாளர் நரசிம்மன், சேர்காடு கென்னடி, பிரம்மபுரம் பழனி, மாநகர அவைத் தலைவர் சூரி என்கின்ற கோவிந்தன், மாநகர துணைச் செயலாளர் தேவநே சன், இளைஞர் அணியின் மாநில துணைச் செயலா ளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்து வர் ராஜேஸ்வரி மோகன் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜமார்த்தாண்டன், குடியாத் தம் தொகுதி பார்வையாளர் உதயகுமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சரவணன், தணிகாசலம், ரவி, கரு ணாகரன், முருகன், பகுதி கழகச் செயலாளர்கள் வன் னியராஜா, துணை மேயர் சுனில்குமார், பரமசிவம், முருகப்பெருமான், பேரூர் கழகச் செயலாளர் நேரு, மாநகராட்சியின் மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, ஒன்றிய குழுத் தலைவர் வேல்முரு கன், பேரூராட்சி தலைவர் சாமுண்டீஸ்வரி ரவி, புவ னேஷ்குமார், பூஞ்சோலை சீனிவாசன், ஜெய்சங்கர், கிருபாகரன், முருகானந்தம், வாசுகி கோட்டீஸ்வரி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ரவிக்குமார், துணை அமைப்பாளர்கள் பிரகாஷ், வி.எம்.டி.பாலாஜி, அர்ச்சனா நவீன் சங்கர், டீட்டா சரவணன், ராஜகமல், சத்தியமூர்த்தி, துணை அமைப்பாளர்கள் முரளி பாஸ் கர், பன்னீர்செல்வம், இப்ராஹீம், சதீஷ், தினேஷ்குமார், சுரேஷ்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கள் அசோக்குமார், கமலநாதன் உள்பட கழக முன்ன ணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில்கள்!

நிகழ்ச்சியின் நிறைவுப் பகுதியாக கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில்களின் விவரம் வருமாறு:

**கேள்வி - பதில்கள்**

**டி.சதீஷ்குமார், காட்பாடி மேற்கு ஒன்றியம்!**

**கேள்வி:** கூட்டணிக் கட்சிகள் பிரிந்து செல்லாமல் எப்ப டிப் பார்த்துக்கொள்ள போகிறோம்?

**துணை முதலமைச்சர் :** 2019இல் நம் கழகத் தலைவர் அமைத்த கூட்டணி இன்றுவரை ஒரு வெற்றிக் கூட்டணியாக இருக்கிறது என்றால் அதற்கு காரணம் நம் தலைவர் அமைத்த கூட்டணிதான். இதுவரை சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிப்பெற்றுள்ளோம். நம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கும், ஒன்றிய பா.ஜ.க அரசின் அடிமை அ.தி.மு.க கூட்டணிக்கும் வித்தி யாசம் உண்டு.

நம் தலைவர் அவர்கள் தேர்தல் நேரத்தில் கூட்டணிக் கட்சிகளுக்கு, பேச்சுவார்த்தைக் குழுவை அமைப்பார். அந்தக் குழுக்கள் அறிவாலயத்துக்கு வந்து பேசுவார்கள். தொகுதி உடன்பாடுகள் எல்லாம் நடக்கும். அதன்பிறகு தலைவர் அவர்கள் அவர்களை சந்தித்து கையெழுத்து போடுவார்கள் கூட்டணி பேச்சுவார்த்தை முடியும்.

அவர்களின் தலைமை அலுவலத்தில் அந்தக் கூட்ட ணிக் கூட்டத்தை நடத்தியதே கிடையாது. ஏனென்றால் அது அரசியல் கூட்டணி கிடையாது. அது ஒரு பிசினஸ் டீலிங் அவ்வளவுதான். இதுதான் அ.தி.மு.கவுக்கும், தி. மு.கவுக்கும் உள்ள கூட்டணி வித்தியாசம்.

நம் தலைவர் மாதிரி கூட்டணிக் கட்சியினரை ஒருங்கி ணைத்துச் செல்லக்கூடிய ஒரு தலைவர் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கிடையாது. இதை பல மாநில தலைவர் கள் பார்த்து நம்முடைய தலைவரைப் பார்த்து பெருமையா கப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். உங்களிடத்தில் நான் ஒரேயொரு கோரிக்கை வைக்கிறேன். நீங்கள் தலைவர் அவர்கள் எந்த கூட்டணி வைத்தாலும் நீங்கள் கூட்டணிக் கட்சியினருடன் இணைந்து செயல்பட்டு களப்பணியாற்றி, தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக அறிவித்தாலும், கலைஞர்தான் உங்களுடைய தொகுதி வேட்பாளர். நம்மு டைய தலைவர் தான் வேட்பாளர் என்ற எண்ணத்தோடு நீங்கள் களப்பணியை ஆற்றிட வேண்டும்.

**கதிர்வேலன், காட்பாடி!**

**கேள்வி:** இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை எப்படி அதிகப்படுத்த வேண்டும்?.

**துணை முதலமைச்சர் :** கண்டிப்பாக நம்முடைய தலைவர் அவர்கள் இதற்காகத்தான் அயராது உழைத் துக் கொண்டிருக்கிறார். தலைவருடைய முயற்சியால் இந்த நான்கரை வருடங்களில் மட்டும் 10 லட்சம் கோடிக்கு மேல் முதலீடுகளை ஈர்த்து சுமார் 31 லட்சத்திற்கு மேல் வேலை வாய்ப்பை இளைஞர்களுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் சுமார் 13 லட்சம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி, அதில் மூன்றரை லட்சம் மாணவர் களுக்கு வேலை வாய்ப்பை நம் முதலமைச்சர் வழங்கி இருக்கிறார்.

இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பற்றி நம் முதல மைச்சர், கழகத் தலைவர் பார்த்துக் கொள்வார். ஆனால், இளைஞர்களிடத்தில் நம் அரசின் திட்டங் களை யெல் லாம் கொண்டு சேர்த்து, அரசினால் அந்த இளைஞர்கள் அடைந்த பயன்களை எடுத்துக் கூறி, இளைஞர்களு டைய ஆதரவை, நம்முடைய இயக்கத்திற்கும், நம்மு டைய அணிக்கும் நீங்கள்தான் தேடித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**சு.அருண்குமார், சேன்பாக்கம் தொகுதி!**

**கேள்வி:** கலைஞர் அவர்களைப் போல நீங்கள் ஓய் வில்லாமல் தொடர்ந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்று கோருகிறேன்.

**துணை முதலமைச்சர் :** கலைஞருக்கு நிகர் கலைஞர் மட்டும்தான். கலைஞர் மாதிரி யாராலும் உழைக்க முடி யாது. கலைஞர் மாதிரி யாராலும் மக்கள் பணி ஆற்றிடவும் முடியாது. இன்னும் சொல்லப்போனால், கலைஞர் மாதிரி ஒரு தலைவர் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே யாரும் இன்னொரு கலைஞர் உருவாக முடியாது.

கலைஞர் மற்றும் தலைவர் அவர்களைப் போல ஓய்வில்லாமல் மக்கள் பணியாற்ற என்னுடைய முழு முயற் சியை நான் அளித்து வருகின்றேன். நம் தலைவருடைய உழைப்புக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. கலைஞரி டமே, `உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்றால், ஸ்டாலின்' என்ற பாராட்டைப் பெற்றவர் நம்முடைய தலைவர் அவர்கள்.

கலைஞர் மற்றும் தலைவர் அவர்களுக்கு இணை யாக மக்கள் பணியாற்றி வருகிறோமா, இல்லையா என் பதை வருங்காலத்தில் நீங்கள்தான் கணித்துக் கூற வேண்டும் என்று இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**புவனேஸ்வரி, காட்பாடி மேற்கு ஒன்றியம்!**

**கேள்வி:** தேர்தலில் வெற்றிபெற கழக நிர்வாகிகள் ஒன்றி ணைந்து எவ்வாறு உழைக்க வேண்டும்?

**துணை முதலமைச்சர்:** இது உங்கள் கோரிக்கை மட்டு மல்ல. எனது கோரிக்கையும், தலைவரின் கோரிக்கை யும் இதுதான். நம் கழக அமைப்பு போன்ற ஒரு உட்கட்சி அமைப்பு இந்தியாவில் உள்ள எந்த இயக்கத்துக்கும் கிடையாது. நம் நிர்வாகிகள் ஒன்றிணைந்து செயல்பட் டால், இந்தியாவிலே எந்தக் கட்சியாலும் திராவிட முன் னேற்றக் கழகத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாது. நம் வெற்றியை அவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாது. நம் கழகத்தினர் ஒற்றுமையை 2026 சட்டமன்றத் தேர்த லில் நிரூபித்துக் காட்டுவோம்.

**மோகன், திருவோணம் பேரூர்!**

**கேள்வி:** 25 பேர் குழுவாகச் சென்று வாக்கு சேகரித்தல், மற்றும் போலி வாக்காளர்களை தடுத்து நிறுத்த முடியுமா?

**துணை முதலமைச்சர் :** சென்ற வாரம் தலைவர் அவர் கள் சென்னையில் அனைத்து மாவட்ட நிர்வாகிகளையும் அழைத்து ஒரு முன்னெடுப்பை தொடங்கினார்கள். என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி.

கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து வாக் குத் திருட்டைத் தடுக்க வேண்டும். கடந்த தேர்தலைவிட, இந்தத் தேர்தலில் நம் வாக்குச்சாவடியில் அதிகமான வாக்கு வித்தியாசத்தை வாங்கி காட்ட வேண்டும். கழக அரசின் சாதனைகளை இல்லந்தோறும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்.

**சசிகுமார், காட்பாடி ஒன்றியம்**

**கேள்வி:** இளம் தலைமுறையினரை கட்சியில் எப்படி சேர்ப்பது?

**துணை முதலமைச்சர் :** இன்றைக்கு இளைஞர் அணி யில் கிளை, வட்டம், பாகம் வாரியாக சுமார் 5 லட்சம் நிர் வாகிகள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு மாவட்டமாக, ஒவ்வொரு நாளும் முரசொலியில் அறிவிப்பு வந்து கொண்டு இருக்கிறது. சில மாவட்டங்களில் அறிவிப்பு வந் துவிட்டது, மீதமுள்ள மாவட்டங்களிலும் நிர்வாகிகளில் அறிவிப்பு விரைவில் வர இருக்கிறது.

இளைஞர் அணி நிர்வாகிகள் ஒவ்வொருவரும் அவர்க ளின் பகுதியில் உள்ள இளைஞர்களை அணுகி, கழக அர சின் சாதனைகளை எடுத்துக்கூறி, இளைஞர்களின் ஆத ரவை கழகத்திற்கு தர ஒருங்கிணைக்க வேண்டிய பணி களை இளைஞர் அணி தம்பிமார்கள் செய்வார்கள். அதை யெல்லாம் இங்கு வந்திருக்கின்ற ஒன்றிய கழக செயலாளர் கள், கழகத்தின் நிர்வாகிகள் இளைஞர் அணியை நீங்கள் வழிநடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தலுக்கும் இன்னும் 5 மாதங்கள்தான் இருக்கின் றன. இப்போதே உங்கள் களப்பணியைத் தொடங்குங்கள். நம்முடைய தலைவர் அவர்கள் 200 தொகுதிகள் வெற்றி பெற வேண்டும் என்று இலக்கு கொடுத்துள்ளார்கள். வெல் வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று சொல்லியி ருக்கிறார். அது பத்தாது. நாம் அடுத்த 5 மாதங்கள் சிறப்பாக பணியாற்றினோம் என்றால், நமக்குள் இருக்கின்ற மனக சப்புகளை மறந்து, வெற்றி ஒன்றே குறிக்கோள் என்று பணி யாற்றினோம் என்றால் 200 இல்லை 200க்கும் அதிக மான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும்.

அதற்கான தொடக்கமாக இந்த காட்பாடி தொகுதியின் வெற்றியை நீங்கள் அமைத்துக்காட்ட வேண்டும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என் றால், தொடர்ந்து இரண்டாவது முறையாக நம் தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண் டும் என்றால் நாம் அனைவரும் கழகத்தில் இறங்கி, மக் களை சந்தித்து நம் பிரச்சாரத்தை இன்னும் அதிகமாக எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியை இவ்வளவு குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்த அண்ணன் நந்தகுமார் அவர்க ளுக்கும், மாவட்ட நிர்வாகிகள் அத்தனைப்பேருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் அவர்களுக்கும், ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும், வந்திருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகள் உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரி வித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார்.